**வல்வெட்டித்துறை நகர சபை**

-----------------------------------------

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

-----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 28 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வல்வெட்டித்துறை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,640,500 பெறுமதியான 06 வாகனங்கள் சபைக்கு உரித்தற்றனவாக இருந்தன. எவ்வாறாயினும் அவற்றின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) நேர்முன்னைய வருடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்த வேலைகளுக்கான மிகை ஏற்பாடு கூட்டுமொத்தம் ரூபா 251,030 நாளதுவரை திரண்ட நிதிக்குச் செலவு வைக்கப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் திரண்ட நிதி குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

கூட்டுமொத்தம் ரூபா 3,747,336 பெறுமதியான ஆதனவரி நிலுவைகளினை உரிய காலத்தில் அறவிடப்படுவதற்கு நகரசபை நிதி விதிகள் அத்தியாயம் III இன் பிரிவு 54(2) இன் பிரகாரம் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னய ஆண்டின் ரூபா 19,831,328 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 14,127,614 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 790,000 | 433,639 | 764,485 | 3,747,337 | 800,000 | 350,918 | 766,922 | 4,782,089 |
| வாடகைகள் | 5,682,000 | – | 3,570,082 | – | 4,680,000 | – | 14,158,866 | – |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 738,500 | – | 839,645 | – | 835,000 | – | 703,020 | – |
| ஏனைய வருமானம் | 7,848,500 | – | 15,882,683 | 30386,890 | 8,907,000 | – | 11,243,286 | 27,387,886 |
| | **15,059,000** | **433,639** | **21,056,895** | **34,134,227** | **15,222,000** | **350,918** | **26,872,094** | **32,169,975** |

### 2.2.2 வீதவரிகள்

வீதவரி நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 3,747,337 கடந்த 01 தொடக்கம் 14 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------

**3.1 செயலாற்றல்**

---------------

**திண்மக்கழிவு முகாமைத்துவம்**

----------------------------------------

கழிவுப் பொருட்கள் அகற்றப்படும் இடத்தில் கழிவுப் பொருட்களினை தரம் பிரிக்காது குவிக்கப்பட்டு எரிக்கப்படுவதனால் சூழல் மாசடைதல் நிலைமை அவதானிக்கப்பட்டது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது நூலகம் மற்றும் கலாச்சார நிலையம் என்பன அமைப்பதற்காக சேகரிக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 7,228,387 குறித்த நோக்கங்களிற்குப் பயன்படுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது கடந்த இரு ஆண்டுகளாக நிலையான வைப்பிலிடப்பட்டிருந்தது.

(ஆ) பொதுப் பூங்காவொன்றினை அமைத்தலுக்காக குத்தகையடிப்படையில் சபையினால் பெறப்பட்டிருந்த ஆதனமானது குறித்த நோக்கத்திற்கு நாளதுவரை உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் கூட்டுமொத்தம் ரூபா 298,800 குத்தகைக் கட்டணமாக சபையினால் கடந்த நான்கு ஆண்டுகளுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

-------------------------------------------

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 09 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகள் தாமதமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

-----------------------------------------

சபைக்குரித்தான 05 இந்து மயானங்களில் உடலை தகனம் செய்வதற்கான அனுமதி பெறப்பட்டு தகனம் செய்யப்பட்டிருக்காததுடன் அதற்கான மயான வரியும் சபையினால் அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

--------------------------------------

**3.5.1 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

--------------------------------------

சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் லாண்ட் குறோசர் வாகனம் சபைக்கு உரித்தற்றதாகக் காணப்படுகின்றது.

### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரித்தான 03 வாகனங்கள் கடந்த 05 வருடங்களாக பயன்பாடின்றி காணப்படுகின்றன.

(ஆ) வல்வெட்டித்துறை புதிய சந்தைக்கட்டிட தொகுதியின் தளம் 'ஏ' இல் 11 கடைகள் மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 92,711 தொடக்கம் ரூபா 6,576,449 அல்லது 03 சதவீதம் தொடக்கம் 101 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 3,279 தொடக்கம் ரூபா 6,018,843 அல்லது 05 சதவீதம் தொடக்கம் 15 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

முன்னைய வருடங்களில் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கீழ்வரும் அவதானிப்புக்கள் தொடர்பில் நாளதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| வருடம் | கணக்காய்வுப் பந்தி இலக்கம் | கணக்காய்வு அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2012 மற்றும் 2013 | 2.4.5 | நகரசபைகள் கட்டளை சட்டத்தின் அத்தியாயம் 255 பிரிவு 159(1) இற்கு முரணாக புதிய கட்டட திறப்பு விழா செலவினம் ரூபா 74,330 சபை நிதியால் செலுத்தப்பட்டுள்ளது. |

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| கணக்கீடு | காணி விற்பனை வரிப் பதிவேடு பராமரிக்கத் தவறியமை. |